[1984 பிப்ரவரி 22

இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டம்.

(* 132 —வினா 21340)— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அ. முகவை மாவட்டம் இருக்கன்குடி நீர்தேக்கத் திட்டம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ), (ஆ) மற்றும் (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கன்குடி கிராமத்தின் அருகில் வைப்பாற்றின் குறுக்கே ரூ. 888 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த இருக்கன்குடி திட்டத்தினுடைய நீர் பரப்பளவு எவ்வளவு? ஏற்கனவே இந்த நீர்த்தேக்கம் கட்டப்படுவதால் அந்தப்பகுதியில் அரிசனங்கள் வாழக்கூடிய 18 கிராமங்களிலுள்ள வீடுகளும், விளை நிலங்களும் முழுகுமே என்று அச்சப்படுகிறார்களே, அப்படிப்பட்ட அச்சத்தைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இருக்கன்குடி கிராமத்தின் அருகில் உள்ள வைப்பாற்றின் குறுக்கே 499.50 மில்லியன் கன அடி கொள் அளவு உள்ள நீர்த்தேக்கம் ஒன்றை கட்டும் திட்டம்தான் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டத்தால் எவ்வளவு தூரத்திற்கு நீர்ப்பரப்பு இருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. இருந்தாலும் அரிசன குடியிருப்புப் பகுதிகள் எல்லாம் தண்ணீரில் மூழ்கக்கூடிய அபாயம் இருப்பதாக எந்தவித தகவலும் இல்லை. ஏற்கனவே இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் சொன்னதன் அடிப்படையில், நான் அதிகாரிகளிடம் நேரில் விசாரித்ததில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதை அறிந்திருக்கிறேன் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 பிப்ரவரி 22]

திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டம் மிக முக்கியமான திட்டம். நெல்லை மாவட்டத்தில் வறண்டு போன பல கிராமங்கள் குடிநீர் பிரச்சினையால் மிகவும் கஷ்டப்படுவதால், அப்படிப்பட்ட இடங்களுக்கு, இந்த நீர்த் தேக்கத்தின் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் அமல் நடத்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல இந்தத் திட்டம் குடிநீருக்காக மட்டும் அல்லாமல், நெல்லை மாவட்டத்தில் இந்த வறண்ட பகுதியில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய திட்டம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும் இந்தத் திட்டம் ஆய்வு நிலை முடிந்து அரசின் தீவிர பரி சீலனையில் இருக்கிறது. அரசு முடிவு எடுத்து பிறகு, உரிய காரணங்களுக்காக உரிய முறையில் முடிவு எடுத்த பிறகு, ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். முகவை மாவட்டத்தில் உள்ள கண்மாய் களுக்கும், இதன் மூலம் நீர் வசதி செய்து தர அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல, இப்போது அமைக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தின்படி 499.50 மிலியன் கன அடி கொள் அளவு உள்ள நீர்த்தேக்கம்தான் கட்ட முடியும். இந்த நீர்தேக்கத்தின் வாயிலாக 626.97 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறுகின்றன. அத்துடன் 614.11 ஏக்கர் நிலங்களினுடைய பாசனப் பற்றாக்குறையைப் போக்க முடிகின்றது. அது நீங்கலாக நாகலாபுரம் கிராமத் திலும், வேதப்பட்டி கிராமத்திலும் உள்ள 9,156 ஏக்கர் நிலங்களுக்குப் புதியதாக பாசன வசதி செய்து தர திட்டம் இடப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே இருக்கக்கூடிய இந்தத் திட்டத்தின்படி, இருக்கக்கூடிய வசதி களை நெல்லை மாவட்டத்தில் உள்ள இதேபோன்ற கிராமங் களுக்குத்தான் தர முடிந்து இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை இன்னும் விஸ்தரித்தால்தான், முகவை மாவட்டம் போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கக்கூடிய நிலைமையை அரசு ஆய்வு செய்ய முடியும். ஆகவே, தற்போது அந்த நிலைமையில் அரசு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.